மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
MANONMANIAM SUNDARANAR UNIVERSITY
Abishekapatti, Tirunelveli 627 012
Reaccredited with "A+" Grade(3.46) by NAAC (4th Cycle)
Phone:0462-2338632, Fax:0462-2334363
e-mail: registrar@msuniv.ac.in; Website: www.msuniv.ac.in

**Prof. J. Sacratees, Ph.D.,**
**Registrar**

தேதி: 25.05.2026

## செய்திக்குறிப்பு

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத் துறைகளில் ஒருங்கிணைந்த முதுகலை வணிகவியல் (Integrated M.Com) பாடப்பிரிவிற்கான கலந்தாய்வு மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள **சுந்தரனார் அரங்கம், கீழ்தளத்தில் (Sundaranar Hall Ground Floor)** மற்றும் பட்டயப்படிப்பில் மருந்தாக்கவியல் (D.Pharm) பாடப்பிரிவுக்கான கலந்தாய்வு **சுந்தரனார் அரங்கம், மேல் தளத்தில் (Sundaranar Hall First Floor) வைத்து 27.05.2026** அன்று காலை 10.30 மணிக்கு நடைபெறும்.

மேலும், ஒருங்கிணைந்த முதுகலை வரலாறு (Integrated M.A. History) பாடப்பிரிவுக்கான கலந்தாய்வு **சுந்தரனார் அரங்கம், கீழ்தளத்தில் (Sundaranar Hall Ground Floor) வைத்து 27.05.2026** மதியம் 2.30 மணிக்கு நடைபெறும்.

ஒருங்கிணைந்த முதுகலை அறிவியல் பாடப்பிரிவுகளான (Integrated PG Programme 1.Physics, 2.Chemistry, 3.Mathematics, 4.Biotechnology, 5.Environmental Science, 6.Marine Science) 1. இயற்பியல், 2. வேதியியல், 3. கணிதம் 4. உயிர்தொழிற் நுட்பவியல்,5. சுற்றுச்சூழல் அறிவியல், 6. கடல்சார் அறிவியல், மற்றும், இளங்கலை பாடப்பிரிவுகளுக்கான (B.Sc. Artificial Intelligence and Machine Learning, B.Sc. Cyber Security and B.Sc. Data Science) கலந்தாய்வு மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள ஒருங்கிணைந்த மையத்தில் **(Integrated Block) வைத்து 29.05.2026 அன்று காலை 10.30 மணிக்கு** நடைபெறும்.

கலந்தாய்வில் கலந்து கொள்ள வரும் மாணாக்கர்கள் பல்கலைக்கழக இணையதளத்தில் குறிப்பிட்டுள்ள அனைத்து ஆவணங்களின் அசல் மற்றும் நகல் ஒன்றினை கையில் வைத்திருக்க வேண்டும். தகுதி பெறும் மாணாக்கர்கள் கல்விக் கட்டணத்தை அங்கேயே **இணைய வழியின் மூலம் மட்டுமே செலுத்திக் கொள்ளவும்.** கல்விக் கட்டணம் **பணபரிவர்த்தனை** மூலம் செலுத்த இயலாது. மேலும் விடுதி வசதி தேவைப்படும் மாணாக்கர்களும் விடுதி கட்டணத்தையும் செலுத்தி பதிவு செய்து கொள்ளலாம்.

இதற்கான கூடுதல் விவரங்கள் அந்தந்த துறைத் தலைவர்கள் மின்னஞ்சல் மூலமாகவோ, குறுஞ்செய்தி மூலமாகவோ தெரிவிப்பார்கள். மற்ற விபரங்கள் அனைத்தும் பல்கலைக்கழகத்தில் நேரிலோ, தொலைபேசி மூலமாகவோ(0462-2321616, 2333741) அல்லது www.msuniv.ac.in என்ற இணையதளத்தின் மூலமாகவோ அறிந்து கொள்ளலாம் என்று பதிவாளர் முனைவர் ஜே. சாக்ரட்டீஸ் அவர்கள் அறிவித்துள்ளார்.

ஜே. [signature] 25/5/26
பதிவாளர்

25/5/26

Scanned with OKEN Scanner